ரூ.17.02 கோடியும், 2018–2019 ஆம் ஆண்டில் வட்டி மானியம் ரூ.21.25 கோடியும் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, நெசவாளர் பெருமக்களுக்கென்று தனியாக நெசவாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைப்பதற்கான தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**57—**

## மருத்துவக் கல்லூரி

***36709—திரு. டி. செங்குட்டுவன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி–ஒசூர் தேசிய ஆறு வழிச் சாலையில் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசினுடைய ‘மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களிலே மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும்’ என்ற கொள்கையின் அடிப்படையில், மருத்துவக் கல்லூரி அமைக்கப்படாத மாவட்டங்களில் கிருஷ்ணகிரி மாவட்டமும் இருக்கின்ற காரணத்தினால், வருங்காலத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் அரசினுடைய கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

*2019 பிப்ரவரி 12]*

**திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம் என்பது கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களின் எல்லைகளை ஒட்டி இருக்கின்ற மாவட்டம். கிருஷ்ணகிரி மாவட்டத்தின் வழியாகத்தான் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை செல்லும் நான்கு வழி மற்றும் ஆறு வழிச் சாலை செல்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர்கள் உட்பட அனைவரும் அறிந்த ஒன்று.*

*அதுமட்டுமல்ல, அந்த வழியாகச் செல்லக்கூடிய வாகனங்களில் போக்குவரத்து நெரிசல் காரணமாக தொடர்ந்து விபத்துகள் அதிகமாக ஏற்படுகின்றன. அங்கு விபத்துகள் அதிகமாக நடைபெறும்போது, விபத்தில் அடிபட்டவர்களைக் காப்பாற்றுவதற்காக பெங்களூரு, குப்பம், வேலூர் மற்றும் தருமபுரி போன்ற இடங்களுக்குத்தான் அழைத்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவ்வாறு விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை அழைத்துச் செல்லும்போது பலர் உயிரிழக்கின்ற ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, கிருஷ்ணகிரி–ஓசூர் ஆறு வழிச் சாலையின் வழியிலே ஒரு மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். ஆண்டுக்கு ஒரு மருத்துவக் கல்லூரியை அமைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு அதிகமான விபத்துகள் ஏற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இரண்டு பெரிய விபத்துகள் நடைபெற்றபோது, நானே சம்பவ இடத்திற்கு வருகைதந்து, விபத்தில் காயமடைந்தவர்களை மருத்துவ சிகிச்சை அளிக்க அனுப்பினேன். அதனால்தான், கிருஷ்ணகிரி மாவட்ட தலைமை மருத்துவமனையை ஒரு* best Trauma Care Centre *ஆக நாம் இப்போது உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இருந்தால் மட்டும்தான் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க* management *செய்ய முடியும் என்ற நிலை இல்லாமல், கிருஷ்ணகிரி*

மாவட்ட தலைமை மருத்துவமனை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையாக உருவாக்கப்பட்டிருக்கிறது. C.T. Scan வசதி அங்கு inaugurate செய்யப்பட்டு, இப்போது M.R.I. Scan வசதி செய்யவும் ஆறரை கோடி ரூபாய் நிதியொதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான பணிகள் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் ஒரு மாதத்தில் அங்கு M.R.I. Scan வசதிக்கான கட்டடமும் திறந்து வைக்கப்படவுள்ளது. அதுமட்டுமன்றி, M.R.I. Scan வசதி செய்யப்பட்ட பிறகு, உயர் மருத்துவப் பணியிடங்களுக்கும் நாம் sanction செய்து கொடுக்கவிருக்கின்றோம்.

மேலும், அந்த மாவட்டத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஒசூர் Highway–ல் விபத்துகள் நடக்கின்ற பகுதியை digital mapping செய்தபோது சூளகிரி என்ற இடத்தில்தான் அதிக விபத்துகள் நடைபெற்றிருக்கின்றன. எனவே, சூளகிரியில் Accident Trauma Stabilisation Centre நிறுவ அரசு ஒப்புதல் வழங்கியிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அங்கு Emergency Care Centre–ஐ தொடங்கி, 24 மணி நேரமும் trained ஆன, அதாவது emergency–ல் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் 24 x 7 மணி நேரமும் அங்கே இருந்து, விபத்தில் காயமடைந்தவர்களுக்கு, அதாவது Golden hour–ல் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யவுள்ளோம். இதுபோன்று ஏற்கெனவே மகாபலிபுரத்தில் செய்திருக்கிறோம், ஈஞ்சம்பாக்கத்தில் செய்திருக்கிறோம், பாடியநல்லூரில் செய்திருக்கிறோம், தாம்பரத்தில் செய்திருக்கிறோம். இதனால் மிகப் பெரிய அளவில் உயிரிழப்புகள் குறைந்திருக்கின்றன. THAI திட்டத்தில் இந்த 11 மாதங்களில் death rate 10.6–லிருந்து 2.8 ஆகக் குறைந்திருக்கிறது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு விபத்தில் இறப்பவர்களின் எண்ணிக்கையை அரசு இங்கு குறைத்துக் காட்டியிருக்கிறது. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தை ஒரு முன்மாதிரி மாவட்டமாக எடுத்திருக்கின்றோம். சூளகிரியை இதற்குத் தேர்வு செய்திருக்கின்றோம். எவ்வளவு பெரிய அளவில் விபத்துகள் ஏற்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கும், விபத்துகள் இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கும் போக்குவரத்துத் துறையுடன் இணைந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதையும் தாண்டி விபத்துகள் ஏற்பட்டாலும், தேவையான சிகிச்சை அளிப்பதற்கு கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குக் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு emergency Lab ஏற்படுத்தவும்

*2019 பிப்ரவரி 12]*

*இரண்டரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.* JICA *திட்டத்தில், ஜப்பான் நாட்டு நிதி உதவியின்மூலம் அதிநவீன உபகரணங்களுக்காக 11.68 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவும் இப்போது* on–going scheme *ஆக இருந்து கொண்டிருக்கிறது.* MCH Centre–*க்காக 20 கோடி ரூபாய் அளவிற்கு நிதியொதுக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று, 60 முதல் 70 கோடி ரூபாய் அளவிற்கான பல்வேறு பணிகளுக்கு இந்த ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டம் மட்டும் கருத்தில் கொள்ளப்பட்டு, சிறப்பு நிகழ்வாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

**திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்கிற முறையிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, தலைவர் கலைஞர் அவர்களால் தருமபுரி மாவட்டத்திற்கு அரசு மருத்துவக் கல்லூரி தரப்பட்டது. அதன் பிறகு, நீங்களும் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி தருகிறோம் என்று ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஓசூர் பகுதி, பல்லாயிரக்கணக்கான தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி. அதுமட்டுமல்லாமல், இந்தியா முழுவதும், உலகம் முழுவதிலுமிருந்து இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இங்கு வந்து தங்கிப் பணியாற்றுகிறார்கள். அதுமட்டுமின்றி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால், நீங்கள் ஓர் ஆய்வை நடத்தினீர்களானால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடக்கக்கூடிய விபத்துகளில் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது,* maximum *அங்கு அடிபட்டவர்களை* refer*தான் செய்கிறார்கள் என்பது தெரியவரும். அவர்களை மருத்துவமனையிலே தங்க வைத்து, சிகிச்சை அளிப்பது என்பது மிகவும் சிரமமான காரியமாக இருக்கிறது. அது ஏனென்று தெரியவில்லை. படிக்கின்ற மாணவர்களின் நலனைக் கருதியும், விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கின்ற வகையிலும் இந்த அரசு எங்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு அவசியம் ஒரு மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

ஏற்கெனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மருத்துவக் கல்லூரிக்கு இடத்தினை தேர்வு செய்து தயாராக வைத்திருக்கிறோம். ஆகவே, அந்த இடத்திலே ஒரு மருத்துவக் கல்லூரியை தாங்கள் அவசியம் தந்து உதவுவீர்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொள்கை முடிவின்படி கருத்தில் கொள்ளப்படும் என்ற பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே தந்திருக்கின்றேன். விபத்து காய சிகிச்சை மையமாக, கிருஷ்ணகிரி மாவட்டத் தலைமை மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. Neuro surgery–ஐ மட்டும்தான் சேலத்திற்கு refer செய்கிறோம். வருங்காலத்தில் அந்தச் சிகிச்சையையும் அங்கேயே இருந்து செய்வதற்குண்டான நடவடிக்கையை அரசு எடுத்துக் கொண்டிருக்கின்றது. மருத்துவக் கல்வியைப் பொறுத்தவரைக்கும், இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத அளவிற்கு ஏற்கெனவே உள்ள 1,900 M.B.B.S. இடங்களை 2,900 இடங்களாக உருவாக்கியிருக்கின்றோம். 575 P.G. seats வாங்கியிருக்கின்றோம். இந்த மாதத்தில்கூட 56 புதிய P.G. seats வாங்கியிருக்கின்றோம். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மருத்துவக் கல்வியில் மகத்தான ஒரு முன்னேற்றத்தை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை எட்டிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையையும் அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. ரா. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாளில் மகிழ்ச்சியுடன் தமிழர்கள் பொங்கலைக் கொண்டாட, பரிசுத்

*2019 பிப்ரவரி 12]*

*தொகுப்புடன் ரூ.1,000/– ரொக்கத்தையும் ஜனவரித் திங்களில் வழங்கினார் மாண்புமிகு முதலமைச்சர் பெருமகனார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மகிழ்ச்சி மறைவதற்குள் பிப்ரவரி திங்களில், வறட்சியில் வாட்டமுற்ற மக்களின் வாட்டத்தைப் போக்கி, வளமான வாழ்க்கை அமைவதற்கு இடைக்கால நிதியாக அனைவருக்கும் ரூ.2,000/–ஐ அள்ளித் தந்திருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களின் அசத்தல் நாயகன் மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அய்யா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.*

*பெரம்பலூர் மாவட்டம், பின்தங்கிய மாவட்டம். ஆதி திராவிட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட கல்லுடைக்கும் தொழிலாளர்கள் நிரம்பிய மாவட்டம். வளமான மருத்துவ வசதியைப் பெறுவதற்காக, பெரம்பலூரில் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று அறிவித்து, அதற்கென்று புதியதாக* Dean*–ஐ நியமித்து 12 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. ஆகையால், 'வருடத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி' என்ற அரசின் கொள்கை முடிவின்படி பின்தங்கியிருக்கிற பெரம்பலூர் மாவட்டத்தில் விரைந்து மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு கடந்த ஆண்டு நிர்ணயித்தபடி ரூ.229 கோடி நிதி தேவைப்படும். இது ஒரு மிகப் பெரிய திட்டம். இருந்தாலும்கூட அரசின் கொள்கை முடிவாக 'ஒவ்வோர் ஆண்டும் ஒரு மருத்துவக் கல்லூரி' என்ற அடிப்படையில், கடந்த ஆண்டில் புதுக்கோட்டையில் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. இந்த ஆண்டு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட இருக்கிறது. ஏற்கெனவே,* E.S.I. *மருத்துவக் கல்லூரியை* takeover *செய்திருக்கிறோம். இந்த ஆண்டு, மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஆகியோருடைய வேண்டுகோளுக்கிணங்க முதன்முதலாக பெருந்துறை மருத்துவக் கல்லூரியை அரசு மருத்துவக் கல்லூரியாக* takeover *செய்திருக்கிறோம். மத்திய அரசு கூடுதலாக நிதி செலுத்த முடியாத சூழ்நிலையில்,*

நம்முடைய மாநில நிதியைக் கொடுத்து, K.K. நகர் E.S.I. மருத்துவக் கல்லூரியை எடுத்திருக்கிறோம். அதேபோல், கோயம்புத்தூரிலும் E.S.I. மருத்துவக் கல்லூரியை எடுத்திருக்கிறோம். ஆகையால், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் செய்யாத அளவிற்கு, மருத்துவக் கல்லூரிக்கு மிக அதிக நிதியை ஒதுக்கி, infrastructure, equipment, HR என்று சொல்லக்கூடிய faculty வரைக்கும் கொடுக்கின்றோம். மற்ற மாநிலங்கள் எல்லாம் தங்களுடைய existing M.B.B.S. seats–ஐ தக்க வைத்துக்கொள்வதற்கே தடுமாறிக் கொண்டிருக்கின்ற நிலையில், 1,000 M.B.B.S. seats–ஐ அதிகப்படுத்திய ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு மட்டும்தான்; (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களில் உள்ள regional மருத்துவக் கல்லூரிகளில் 345 M.B.B.S. seats–ஐ மேலும் increase செய்யவிருக்கிறோம். நான் சொன்னதுபோல, ஒவ்வோர் ஆண்டும் அரசினுடைய கொள்கை முடிவின்படி அதுகுறித்துப் பரிசீலிக்கின்றபோது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய பெரம்பலூர் மாவட்டமும் அரசினுடைய கருத்திலே கொள்ளப்படும், மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.

முற்பகல் 10–55

**திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற கோட்பாட்டோடு இந்தியத் திருநாட்டிலே தமிழகத்தை தலைநிமிரச் செய்து சிறப்பான ஆட்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கிற, அம்மாவின் அரசை வழிநடத்துகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட இரண்டு ஒன்றியங்கள் தாலுகாக்களாக

2019 பிப்ரவரி 12]

அறிவிக்கப்பட்டு, 3 ஆண்டுகளாகின்றன. ஏற்கெனவே, கொடுமுடி தாலுகாவில் தாலுகா மருத்துவமனை இயங்கி வருகிறது. மொடக்குறிச்சியிலே அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனை இன்னும் தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படாமல் உள்ளது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள், வரும் நிதியாண்டில் அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து, தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்தித்தர ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசின் கொள்கைப்படி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எந்தப் பகுதிகளிலெல்லாம் புதிய தாலுகாக்களை உருவாக்குகிறாரோ, அதற்கேற்ப, 'யானை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே' என்பதுபோல, அந்தப் பகுதிகளிலெல்லாம் தாலுகா மருத்துவமனைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே 70 centres அமைக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ளவை அரசினுடைய பரிசீலனையில் உள்ளன. மொடக்குறிச்சியிலுள்ள மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு, அவருக்கு வாய்ப்பு வழங்க வேண்டாம் என்று நீங்கள்தான் சொன்னீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு, நீங்கள்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டாம் என்று சொன்னீர்கள்.

வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.